செய்தி வெளியீடு எண்: 503 நாள் : 18.09.2013

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று (18.9.2013) தலைமைச் செயலகத்தில், சவுதி அரேபிய நாட்டிலிருந்து தனியார் மீன்பிடி கப்பலில் மீன்பிடிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது தவறுதலாக ஈரான் நாட்டு கடல் எல்லைப்பகுதிக்குள் சென்றதன் காரணமாக கைது செய்யப்பட்டு, 16.9.2013 அன்று சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த 16 மீனவர்கள் சந்தித்து, தங்களை விடுவிக்க உறுதியான நடவடிக்கை எடுத்தமைக்காக தங்களது நெஞ்சார்ந்த நன்றிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டார்கள். அப்போது, அம்மீனவர்களின் வறுமை நிலையினைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 16 மீனவர்களுக்கும் தலா 1 லட்சம் ரூபாய்க்கான காசோலையினை வழங்கினார்கள்.

சவுதி அரேபிய நாட்டில் தனியார் மீன்பிடி நிறுவனத்தால் ஒப்பந்த அடிப்படையில் மீன்பிடி தொழிலாளர்களாக பணிபுரிந்து வந்த ராமநாதபுரம் மாவட்டம், காரங்காடு, முள்ளிமுனை, மோர்ப்பனை, திருப்பாலைக்குடி மற்றும் ரோச்மாநகர் மீனவ கிராமங்களைச் சேர்ந்த பத்து மீனவர்கள், நாகப்பட்டினம் மாவட்டம் பழையார் கிராமத்தைச் சேர்ந்த ஒரு மீனவர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் மற்றும் ஆரோக்கியபுரம் மீனவ கிராமங்களைச் சேர்ந்த ஐந்து மீனவர்கள், என மொத்தம் 16 தமிழக மீனவர்கள் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் சவுதி அரேபியா நாட்டிலிருந்து தனியார் மீன்பிடி கப்பலில் மீன்பிடிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது தவறுதலாக ஈரான் நாட்டு கடல் எல்லைப் பகுதிக்குள் சென்றதன் காரணமாக, அந்நாட்டு கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். மேலும், ஈரான் நாட்டு நீதிமன்றம் கைது செய்யப்பட்ட மீனவர்கள் ஒவ்வொருவரும் 5,750 அமெரிக்க டாலர் அபராதமும், 6 மாத கால சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தது.

இதனை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 27.7.2013 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதத்தில் ஈரான் நாட்டு நீதிமன்றம் விதித்த 6 மாத கால சிறை தண்டனையை அனுபவித்து விட்ட தமிழக மீனவர்கள், வறுமை காரணமாக அபராதத் தொகை செலுத்த இயலாததால் தொடர்ந்து சிறையில் வாடுகிறார்கள் என்றும் அவர்களை மீட்க ஈரான் நாட்டிலுள்ள இந்தியத் தூதரகம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வலியுறுத்தினார்கள்.

ஈரான் நாட்டு சிறையில் வாடும் 16 தமிழக மீனவக் குடும்பங்களின் வறிய நிலையினை கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட 16 மீனவக் குடும்பங்களின் இல்லங்களுக்கு 1.8.2013 அன்று நேரில் சென்று, அவர்களுக்கான காசோலைகளை வழங்கி ஆறுதல் கூறினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்ட தொடர் நடவடிக்கையின் காரணமாக தமிழகத்தைச் சேர்ந்த **16** மீனவர்களும் **16.9.2013** அன்று ஈரான் நாட்டு சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டனர். விடுவிக்கப்பட்ட **16** தமிழக மீனவர்களையும் மும்பை விமான நிலையத்திற்கு சென்று வரவேற்குமாறு மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள். மேலும், தமிழக அரசின் செலவில் அவர்களை சொந்த கிராமங்களுக்கு அனுப்பி வைக்கவும் உத்தரவிட்டார்கள்.

அதன்படி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் மும்பை விமான நிலையத்திற்கு நேரில் சென்று பாதிக்கப்பட்ட மீனவர்களை வரவேற்றார். பின்னர், அவர்கள் சென்னைக்கு விமானம் மூலம் அழைத்து வரப்பட்டு சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி விடுதியில் தங்க வைக்கப்பட்டனர். மேலும், அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் தமிழக அரசால் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அவரவர் சொந்த ஊர்களுக்கு செல்வதற்கான ஏற்பாடுகளும் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில், ஈரான் நாட்டு சிறையில் வாடிய தங்களை தாயகம் அழைத்துவர தேவையான நடவடிக்கைகளை எடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவிக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட மீனவர்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட தமிழக மீனவர்களுடைய கோரிக்கை உடனடியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர்கள் அனைவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்தனர். இந்தச் சந்திப்பின்போது, ஈரான் நாட்டு சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த **16** மீனவக் குடும்பங்களின் வறுமை நிலையினைக் கருத்தில் கொண்டு, மேலும் தலா **1** லட்சம் ரூபாய்க்கான காசோலையினை, அவர்களிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

இந்தச் சந்திப்பின்போது பாதிக்கப்பட்ட மீனவர்களிடம் பேசிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஈரான் நாட்டுச் சிறையில் தமிழக மீனவர்கள் வாடிக் கொண்டிருப்பதை அறிந்து தான் மிகவும் துயருற்றதையும், மீனவர்களை விடுவிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்ததையும், வறுமையில் வாடிய மீனவக் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயை மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் மூலம் வழங்கியதையும் சுட்டிக்காட்டியதோடு, தற்போது தமிழக மீனவர்கள் ஈரான் நாட்டுச் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பது தனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது என்றும் தெரிவித்தார்கள். மேலும் அவர்களிடம் பேசிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஈரான் நாட்டுச் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட மீனவர்கள் தங்கள் வாழ்க்கையை புதிதாக தொடங்குவதற்கு ஏதுவாக தற்போது தலா ஒரு லட்சம் ரூபாயை வழங்கியுள்ளதாகத் தெரிவித்து, பணிநிமித்தம் காரணமாக வெளிநாடுகளுக்குச் செல்லாமல், தமிழ்நாட்டிலேயே மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள வேண்டும் என்ற தனது விருப்பத்தையும் தெரிவித்தார்கள். இது மட்டுமல்லாமல், மீன்பிடித் தொழில் தொடங்குவதற்குத் தேவையான படகினை வாங்க **60** லட்சம் ரூபாய் தேவைப்படும் என்றும், இதில் **30** லட்சம் ரூபாய் தனது தலைமையிலான

அரசால் கொண்டு வரப்பட்டுள்ள திட்டத்தின்கீழ் மானியமாக வழங்கப்படும் என்றும், மீதமுள்ள 30 லட்சம் ரூபாயை வங்கிக் கடன் மூலம் பெற்றுத் தர தமிழ்நாடு அரசு அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்ளும் என்றும் தெரிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், விடுவிக்கப்பட்ட மீனவர்கள் எல்லா வளமும், நலமும் பெற்று சீரோடும் சிறப்போடும் வாழ வேண்டும் என்றும், ஒளிமயமான எதிர்காலம் அவர்களுக்கு காத்திருக்கிறது என்றும் மனதார வாழ்த்தினார்கள்.

அப்போது, அம்மீனவர்கள் தங்களை மீட்க உறுதியான தொடர் நடவடிக்கைகளை எடுத்தமைக்காகவும், பாதிக்கப்பட்ட தங்களது குடும்பங்களுக்கு ஏற்கெனவே தலா ஒரு லட்சம் ரூபாய் நிவாரணத் தொகை வழங்கியமைக்காகவும், தற்போது தங்களின் வறிய நிலையை அறிந்து தாயுள்ளத்துடன் மீண்டும் தலா 1 லட்சம் ரூபாய் என மொத்தம் 2 லட்சம் ரூபாய் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கியமைக்காகவும், தற்போது தொழில் தொடங்க ஏதுவாக 30 லட்சம் ரூபாய் மானியம் மற்றும் 30 லட்சம் ரூபாய் வங்கிக் கடன் ஆகியவற்றை செய்து தர உத்தரவு அளித்ததற்காகவும் தங்களது நெஞ்சார்ந்த நன்றிகளை கண்ணீர் மல்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் திரு கே.ஏ. ஜெயபால், தலைமைச் செயலாளர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன் வளத் துறைச் செயலாளர் முனைவர் எஸ். விஜயகுமார், இ.ஆ.ப., மீன்வளத் துறை இயக்குநர் திரு ச. முனியநாதன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 18.9.2013